# ***யாழ்ப்பாணத்தில் மல்லாரி இசை: கலைஞர்களும் தனித்துவங்களும்***

*சுந்தரமூர்த்தி கோபிதாஸ்,*
***தகுதிகாண் விரிவுரையாளர், வாத்தியத்துறை(வயலின்), சேர் பொன் இராமநாதன் அரங்காற்றுகை மற்றும் கட்புலக் கலைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்***
*gobithas1@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*மல்லாரி இசையானது முற்றுமுழுதாக நாதஸ்வர தவில் வாத்தியங்களுக்கே உரித்துடைய இசையாக இருந்து வருகின்றது. இது ஆலயங்களின் அனைத்து நிகழ்வுகளுக்கும் ஒரு முக்கியமான வாசிப்பு முறையாகப் பேணப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் இம் மல்லாரி வாசிப்பு முறையானது சிறுசிறு ஆலயங்களில் தனிநபர் வாசிப்பாக வாசிக்கப்பட்டு வந்தாலும் காலப்போக்கில் மல்லாரிகளின் வாசிப்பிலே குழுச் செயற்பாடுகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இக் குழுச் செயற்பாடுகளுக்கான காரணங்களில் மிகவும் முக்கியமானதாகச் சொல்லப்படுவது ஆலயங்களும் அதன் நிர்வாகமும் உற்சவங்களைப் போட்டி மனப்பாங்கில் செய்வதும், நாதஸ்வர, தவில் கலைஞர்களுக்கு மக்கள் மத்தியிலுள்ள நட்சத்திர அந்தஸ்த்தையொத்த பிரபல்யமும் வெகுசனக் கவர்ச்சியுமாகும். இதன் காரணமாக நாதஸ்வர தவில் கலைஞர்கள் ஆலயங்களின் நிகழும் அனைத்து நிகழ்வுகளுக்கும் மேலதிக வலுச் சேர்ப்பவர்களாக இருப்பது மட்டுமன்றி ஆலயங்களின் சிறப்பு ஆஸ்தானக் கலைஞர்களாவும் மிளிர்கின்றார்கள். ஒவ்வொரு திருவிழா உபயகாரர்களும் போட்டிபோட்டு பல குழுக் கலைஞர்களை அழைப்பதால் பல நாதஸ்வர தவில் கலை ஜாம்பவான்கள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் சங்கமிப்பது என்பது யாழ்ப்பாணத்து நாதஸ்வர தவில் பாரம்பரியத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இது யாழ்ப்பாணத்தில் மட்டுமே காணக்கூடிய ஒரு சிறப்பம்சமாகும். இன்று மல்லாரி தனிநபர் வாசிப்பிலிருந்து படிப்படியாக விடுபட்டு குழு வாசிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தில் மல்லாரி இசையினதும் இசைக் கலைஞர்களினதும் தனித்துவத்தைத் திரைவிலக்க இவ்வாய்வு முயல்கிறது. பாரம்பரிய இசையில் தனித்துவம் என்றால் என்ன? யாழ்ப்பாணத்தில் மல்லாரி வாசிப்பில் தனிக்கலைஞர் குழு மற்றும்*

பிரதேச ரீதியான தனித்துவங்கள் காணப்படுகின்றனவா? தவில் மற்றும் நாதஸ்வரத்தில் மல்லாரி வாசிப்பில் யாழ்ப்பாணம் தென்னிந்தியாவிலிருந்து மாறுபடும் போக்கினைக் கொண்டுள்ளதா? போன்ற கேள்விகளுக்கான விடைகளை இவ்வாய்வு கலைஞர்களுடனான நேர்காணல் நேரடி அவதானிப்புகள் என்பவற்றினூடு முன்வைக்கிறது.

**திறவுச் சொற்கள்:** மல்லாரி, கலைஞர்கள், பாரம்பரியம், தனித்துவம், நாதஸ்வரம், தவில், மரபு

**ஆய்வின் அறிமுகம்**

தமிழர்களிடையே ஆலயங்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமன்றி நாளந்த வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பண்பாட்டு நிறுவனங்களாகத் திகழ்கின்றன. பல கலைகள் கோயில் என்ற நிறுவனத்தால் பேணி வளர்த்தெடுக்கப்பட்டு வருவதை வரலாற்றுச் சான்றுகளும் சமகால அனுபவங்களும் எடுத்தியம்புகின்றன. தமிழர்களின் பாரம்பரிய இசையும், நாட்டியமும் கோயில் கலைகளாகவே வளர்ந்து வந்துள்ளன. அன்று தொட்டு இன்று வரை பல மாற்றங்கள் சமூகங்களுக்கிடையே நிகழ்ந்ததாலும் பாரம்பரிய இசையானது கிராமங்களிலும், நகரங்களிலும் கோயில்கள் ஊடாகவே வளர்ச்சி பெற்றன எனலாம்.

இந்த வகையில் நாதஸ்வர, தவில் கலையின் வரவானது கோயில் இசையை உச்சக்கட்டத்தில் இட்டுச் சென்றது மட்டுமன்றி தினசரி வழிபாட்டு நிகழ்வுகள் அனைத்திலும் இதன் பங்கு மேலோங்கியிருந்தது. இவற்றைவிட விசேட பூசைகள், திருவிழாக்;கள் போன்றவற்றில் இதன் வெளிப்பாடு மற்றும் அந்தஸ்;து சார் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகரித்தும் காணப்பட்டது. இதனாலேயே இத்துறைகளைச் சேர்ந்த கலைஞர்கள் அதாவது நாதஸ்வர, தவில் கலைஞர்கள் தங்களது கற்பனையை வளர்த்துக் கொள்ளவும், கலையை வளர்த்துக் கொள்ளவும் கோயில்களை நல்ல களமாகப் பயன்படுத்திக் கொண்டதுடன் ஆலயத்தை அண்டிய பகுதிகளையே தமது வாழ்விடமாகத் தெரிவு செய்தார்கள்.

காலப்போக்கில் வழிபாட்டு முறைகளுக்காக நாதஸ்வர, தவில் வாசிப்பு முறைகளிலும் பல மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. உதாரணமாக திருவிழாக்காலங்களில் ஒவ்வொரு நாளும் ஆலய பூஜை வேளைகளிலும், திருவீதியுலாவின் போதும் எட்டுத்திக்கிலும் என்ன உருப்படிகள் வாசிக்க வேண்டும் என்கின்ற நியமங்களுக்கேற்ப

இராகங்கள், கீர்த்தனைகள் அல்லது மல்லாரி போன்ற உருப்படிகளை வித்துவான்கள் வாசிப்பார்கள். மங்கள வாத்திய விற்பன்னர்களால் ஆலயங்களில் பூஜை வேளைகளில் வாசிப்பதற்கென்றும், திருவிழாக் காலங்களில் வாசிப்பதற்கென்றும் தனித்தனியான மரபுகள் உருவாக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வந்துள்ளன. எந்தெந்த இசைக்கருவிகள் எவ்வெப்போது தனித்தோ, சேர்ந்தோ வாசிக்க வேண்டும் என்ற முறைமைகளும் அந்தக்காலம் தொட்டு இன்று வரை இருந்து வந்திருக்கின்றது. உதாரணமாக வசந்தமண்டபப் பூஜைகளின் போது கிரியைகளின் நடுவே நாதஸ்வரத்தில் இராகங்கள் மட்டும் வாசிக்கப்படும் வேறு எந்த வாத்தியங்களும் இசைக்கப்படமாட்டாது. இதேபோல் ஆலயத்தில் திருவிழா தொடங்குவதற்கு முதல்நாள் கிரியைகளின் போது தவிலில் மட்டும் "தொம்த தொம்த தொம்த தரிகிட" என்ற சொற்கட்டு வாசிக்கப்பட்டு வீதிவலம் வரும். இதில் நாதஸ்வரம் வாசிக்கப்படமாட்டாது.

நாதஸ்வரத்திற்கென அமைக்கப்பட்டுள்ள சில இசை உருக்களில் மல்லாரி என்பதும் ஒன்றாகும். மல்லர் என்பது தெய்வ விக்கிரகத்தைத் தூக்குபவர்களை (காவிச்செல்வது) குறிக்கின்றது. இப்படித் தூக்குகின்ற பொழுது எழுப்பப்படுகின்ற பேரொலி மல்லரி என அழைக்கப்பட்டு பின்னர் வழக்கிலே மருவி மல்லாரி என அறியக் கிடக்கின்றது. (சுந்தரம், பி.எம் (2018) நாதமும் நானும்). மங்கல இசையின் சிறப்புமிக்க பரிமாணங்களில் ஒன்று மல்லாரி இசையாகும். அக்காலத்தில் வேறு எந்த வாத்தியங்களில் அல்லது இசையமைப்புக்களில் இந்த மல்லாரி இசைக்கப்படுவதே இல்லை. அத்துடன் சாகித்தியம் இல்லாத சங்கீதம் எனவும் பொதுவாக இந்த மல்லாரி அறியக்கிடக்கின்றது. வசந்த மண்டப பூஜை முடிவடைந்து தெய்வ விக்கிரகம் திருவீதியுலாவிற்காகப் புறப்படும் பொழுது மல்லாரி இசைப்பது மரபாகும். பொதுவாகத் திருவிழாக்காலங்களில் இம்மல்லாரியானது மிகப்பெரிய அளவிலும், ஏனைய நாட்களில் இறை விக்கிரகம் வீதியுலா வரும் காலங்களிலும் அதற்கென வகுக்கப்பட்ட இலக்கணங்களின் அடிப்படையில் இசைக்கப்படுவதே மல்லரி இசை மரபு எனப் பழம்பெரும் இசையறிஞர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது இன்று பொதுவாக ஐந்து வகை மல்லாரிகள் இசைக்கப்படுகின்றன. அவை கலசமல்லாரி தளிகைமல்லாரி, தேர் மல்லாரி, சின்னமல்லாரி, பெரியமல்லாரி, என இனங்காணப்படுவதோடு சின்ன மல்லாரியே சாமி புறப்பாட்டின் போது பெரும்பாலான கோயில்களில் இசைக்கப்படுகின்றது. தென்னிந்தியாவில் திருவாரூர் தியாகராஜர் ஆலயம் சிதம்பரம் நடராஜர் ஆலயம் திருப்பதி மற்றும் ஸ்ரீ வில்லிப்பத்தூர் போன்ற ஒவ்வெரு

கோயிலும்; அவற்றுக்கேயான மல்லாரி மரபைக் கொண்;டிருக்கின்றன. *Kirishnan, L. (2016) 'Sithukadu Murugavel deconstructs the Mallari', The Hindu, July 21.)* எனினும் சிதம்பர மரபானது பொதுவாகப் பிற ஆலயங்களிலும் பின்பற்றப்படுகிறது. மல்லாரி வாசிப்பு இடம்பெறும் மல்லாரியானது வீர ரஸம் பொருந்தியதாக இருக்க வேண்டும் என்பதற்காக கம்பீரநாட்டை இராகத்தில் மட்டுமே ஆண்டாண்டு காலமாக அமைக்கப்பட்டு வந்துள்ளது. ஆனாலும் ஒரு சில மல்லாரிகள் இராகமாலிகைகளாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. என்பதும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது. மல்லாரி இசைக்கு அடிப்படையாக அமைந்திருப்பது லயம் எனும் தாளக்கணக்குகள். இந்தத் தாளக்கணக்குகளே மல்லாரியைப் பல வடிவங்களில் பிரசவிக்க உறுதுணையாக அமைந்துள்ளன. எல்லா வகைத் தாளங்களிலும் மல்லாரிகள் அமைக்கப்பட்டிருப்பது ஒரு சிறப்பான அம்சமாகும்.

மல்லாரிகளில் பெரும்பாலானவை நீண்ட காலமாக வழக்கத்திலிருந்தாலும் இராக ஞானமும், தாளப் புலமையும் அதீதமாகக் காணப்பட்ட இசை ஜாம்பவான்கள் சிலர் புதுமையாக மல்லாரிகளை அமைத்துள்ளார்கள். பிற்காலத்தில்தான் மல்லாரிகளை திரிகாலம் செய்வதும், திஸ்ரப்படுத்தி தங்களுடைய திறமைகளுக்கேற்ற வகையில் ஒவ்வொரு கலைஞர்களாலும் அரங்கேற்றப்படுவதும் வழக்கமாக இருந்து வருகின்றது. மல்லாரி அமைப்பதிலும் அதனை வாசிக்கும் முறைகளிலும் கைதேர்ந்த உலகப்புகழ் வாய்ந்த நாதஸ்வர மேதையான திருமெஞ்ஞானம் நடராஜசுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவராவார். தென்னிந்தியக் கலைஞர்களில் சில கலைஞர்களைத் தவிர பெரும்பாலானவர்கள் மல்லாரி வாசிப்பது மிகக் குறைவு என யாழ்ப்பாணத்து நாதஸ்வர வித்துவான்களில் ஒருவராகிய அளவெட்டி சு. கேதீஸ்வரன் அவர்கள் தன்னுடைய நேர்காணலில் தெரிவித்துள்ளார். மேடை நிகழ்வுகளில் மட்டுமே அவர்கள் தங்களுடைய கூடிய கவனத்தையும், நேரத்தையும் செலவிட்டு வருகின்றனர் என்றும் கூறினார்.(கேதீஸ்வரன், சு. (2022) நேர்காணல்-அளவெட்டி. 06.04).

மல்லாரியை எடுத்த எடுப்பில் யாராலும் வாசித்துவிட முடியாது. சாதாரண உருப்படிகள் வாசிப்பதற்கும் மல்லாரி வாசிப்பதற்கும் பெரிய வேறுபாடுகள் உள்ளன. லயத்தில் அதிக வின்னியாசம் செய்பவர்களே மல்லாரியை இலகுவாக வாசிக்க முடியும். இதனை வாசிப்பதற்கென தனி இசை இலக்கணமும் உள்ளது. மல்லாரி வாசிப்பில் கற்பனைக்குப் பெருமளவு இடமிருந்தாலும் அதே அளவிற்கு சவால்களும்

*நிறைந்துள்ளன. அதுவே ஒவ்வொரு வித்துவான்களதும் வாசிப்புத் திறமையை தனிமைப்படுத்திக் காட்ட வழிசெய்கின்றது எனலாம். இந்த வகையில் பார்க்குமிடத்து ஆலயத்திலிருந்து இறையுரு திருவீதியுலா நடைபெறும்போது பின்பற்றப்பட வேண்டிய சில மரபுகளும் நியமங்களும் இருந்தன. அவை மல்லாரிக்கும் பொருந்தும் என்கிறார் இசை அறிஞரும் ஆய்வாளருமான திரு.பி.எம்.சுந்தரம் அவர்கள் [2]. இசையின் அமைதிகளைக் கொண்டு ஆலயத்தில் இன்ன செயற்பாடு நடைபெறுகின்றது என்பதை உணர்த்தும் அடையாள இசையாக மலலாரி விளங்குகின்றது. நாதஸ்வரத்தில் மல்லாரி வாசிக்கப்படுவதற்கு முன் தவில் வாத்தியத்திலே கண்டநடையில் (தொம்த தொம்த தொம்) வாசிப்பர். கண்டநடை வாசிக்கத் தொடங்கியதும் இறை விக்கிரகப் புறப்படத் தயாராகிவிட்டது என்பது பக்தர்களுக்குத் தெரியவரும்.*

***கும்ப மல்லாரி***

*விக்கிரகத்தின் அபிஷேகத்திற்கு கும்பத்து நீர் எடுத்துச்செல்லப்படும் போது திருமஞ்சன மல்லாரி அல்லது கலச மல்லாரி அல்லது தீர்த்த மல்லாரி இசைக்கப்படும். இது பின்வருமாறு அமையும்.*

***இராகம் : கம்பீரநாட்டை***

***தாளம் : சதுஸ்ரஏக தாளம்***

***பாமா கமபநி பா,பா, பஸா ஸகஸநி -***

*தாதொம் தககிமி தோம்தோம் தொம்தா கிடதக*

***பாமா கமபநி பாமா கமபநி***

*தாதொம் தககிமி தாதொம் தககிமி*

***பாநீ பமபஸ்நீ பஸ்நீ பஸ்நி பஸ்நி***

*தாதொம் தககிமிதாம் குந்ததாம் குந்ததாம் குந்ததாம்*

***ஸ்நிஸ்கஸ்h ஸ்நிஸ்க் ம்க்ஸ்நி***

*தககிமிதாம் தகுந்தரி கிடதக*

***தளிகை மல்லாரி***

*மடப்பள்ளியிலிருந்து உணவு கொண்டு வரப்படும் பொழுது தளிகை மல்லாரி இசைக்கப்படும்*

***இராகம் : கம்பீரநாட்டை***

***தாளம் : சதுஸ்ரஏகம்***

***பாநி பஸநி ஸாக ஸநீ // பபநி பஸ்நி ஸாக ஸநீ //***

*தாத குந்தகும்தாம் குந்ததொம் தகிட குந்தகும் தாம் குந்ததொம்*

***பாநி பஸநி பபநி பஸநி // பபஸா பபஸப ஸக ஸகஸநி //***

*தாக தொந்தகும் தகிட தொந்தகும் தொம்தொம்தா தொம்தொம்தா தொம்த கிடதக*

***தேர் மல்லாரி***

*உற்சவத் தேரில் எழுந்தருளிச் செல்லும் போது தேர் மல்லாரி வாசிக்கப்படும்*

***பாநிபப ஸஸகஸநி பபநிபப ஸாஸா***

*குந்தகுகு தகிடதகும் குகுந்தகுகு தத்தாம்*

***பபஸ்பப ஸஸகஸநி பபநிபப ஸாஸா***

*குகந்தகுகு தகிடதகும் குகுந்தகுகு தத்தாம்*

***ஸாஸகம பாபா, பமகஸநி காஸா,***

*தாதரித தத்தாம் ததிங்கிணதொம் தத்தாம்*

***ஸாஸகம பநிஸ்நிப ஸ்நிபமக ஸாஸா***

*தாதரித தகும்தரித ததிங்கிணதொம் தத்தாம்*

***ஸ்ஸ்நிபம ஸ்நிபமக நிபமகஸ பமகஸநி***

*ததிங்கிணதொம் ததிங்கிணதொம் ததிங்கிணதொம் ததிங்கிணதொம்*

***பெரிய மல்லாரி***

***பாபஸநி பநிபஸநி பாமா***

*குந்தகுகு தகுதகுகு தத்தோம்*

***பநிப நீ நீ நீ நீ நீ நி***

*தகிட ததிங்கிணதொம்த*

***பாபஸநி பநிபஸநி பாமா***

*குந்தகுகு தகுதகுகு தத்தோம்*

***பநிப ஸாஸாஸாஸாஸாஸ***

*தகிட ததிங்கிணதொம்த*

***பமகஸநிஸா பமகஸநிஸா பமகஸநிஸா***

*ததிஙகிணதொம்தா ததிஙகிணதொம்தா ததிஙகிணதொம்தா*

***பமகஸநீ மகஸநீ கஸநீ ஸநீ***

*ததிகிடதொம் திகிடதொம் கிடதொம் ததொம்*

***பமகஸநிஸா பமகஸநிஸா பமகஸநிஸர்;;; - 3***

*ததிஙகிணதொம்தா ததிஙகிணதொம்தா ததிஙகிணதொம்தா*

*மங்கள வாத்தியங்கள் பற்றியும், அதன் சிறப்புக்கள் பற்றியும் நூல்களில் பெருவாரியாகக் கூறப்பட்டுள்ள போதும் மல்லாரி இசையைப் பற்றியோ அதன் வாசிப்பு முறைகளைப் பற்றியோ விரிவான தகவல்களை அறிய முடியவில்லை. இந்தப்பின்னணியில் இவ் ஆய்விற்குத் தேவையான முதல்நிலைத் தரவுகளாகப் பழம்பெரும் கலைஞர்களது நேர்காணல்களும், அவர்களால் வாசிக்கப்பட்ட மல்லாரிகளின் பதிவுகளும் அமைந்துள்ளன. இவற்றில் அக்காலத்தில் பிரபலமானவர்களால் வாசிக்கப்பட்ட சில வகையான மல்லாரிகள் இன்று கேட்கமுடியாதவையாகிவிட்டன. கிடைக்கப்பெற்ற மல்லாரியின் பயில்வு சார் தகவல்களின் அடிப்படையில் விபரிப்பு மற்றும் ஒப்பியல் முறைகளைப் பயன்படுத்தி கலைஞர்கள் மற்றும் குழுக்களின் அடையாளத்தை அல்லது தனித்துவத்தை அடையாளம் காண இவ்வாய்வு முயல்கிறது.*

**யாழ்ப்பாணத்தில் நாதஸ்வர, தவில் கலைஞர்களும் மல்லாரியும்**

*யாழ்ப்பாணத்தில் நாதஸ்வர தவில் கலையின் ஆரம்பமானது 1872 ஆம் ஆண்டு சோழர் காலத்திலிருந்து வருவிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மாவிட்டபுரம் இராசா அவர்களும், இணுவில் உருத்திராபதி, கோதண்டபாணி, அப்புலிங்கம் போன்றவர்களும் இந்தியாவிற்குச் சென்று குருகுலக் கல்வி மூலமாகப் பல வருடங்கள் சிட்ஜை செய்தனர். சிதம்பரம் கோவிந்தசாமி நாதஸ்வரக்காரர், வைத்தியநாதன் நாதஸ்வரக்காரர் போன்றவர்களிடம் முறையாகக் கற்றனர். பல வருடங்கள் இந்தியாவிலே கற்ற இவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து முதன்முதலில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் தமது இசைப்பயணததைத் தொடங்கினர். அங்குதான் மல்லாரியும் முதலில் அரங்கேறியது. ( கேதீஸ்வரன், சு. 2022) நேர்காணல்- அளவெட்டி. 06.04*

*யாழ்ப்பாணத்தில் நாதஸ்வரத்திற்கான மரபுகளும், அதனைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளும் இங்கிருந்துதான் தோற்றம் பெற்றது என்றே குறிப்பிடவேண்டும். இந்த நால்வர் மூலமாகப் பல மாணவர்கள் உருவாக்கப்பட்டார்கள். பல ஆலயங்களிலே நிரந்தரமாக நாதஸ்வர தவில் கலைஞர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குரிய வசதிகளும் சிறிது சிறிதாக வழங்கப்பட்டது. இதனூடு கோயில் நித்திய மற்றும் நைமித்திய பூசைகளில் நாதஸ்வர மற்றும் தவில் இசை பிரிக்கமுடியாத அங்கமாயின. மல்லாரியினை அதற்குரிய இசை இலக்கணங்களோடு வாசித்து புலமைபெற்ற நாதஸ்வர தவில் கலைஞர்கள் ஈழத்தில் அதிகமாக உள்ளார்கள். அதிலும் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள் சாவகச்சேரி பஞ்சாபிகேசன், அளவெட்டி M.B..பாலகிருஸ்ணன், N.K.. பத்மநாதன், S.சிதம்பரநாதன், R. கேதீஸ்வரன், இணுவையூர். N.R கோவிந்தசாமி, K.R..சுந்தரமூர்த்தி, V.K..கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி, P.S. ஆறுமுகம்பிள்ளை போன்ற நாதஸ்வரக் கலைஞர்களும், அளவெட்டி தெட்சணாமூர்த்தி இணுவில் சின்னராசா, K.R.புண்ணியமூர்த்தி, நாச்சிமார் கோயில் கணேசன், குமரகுரு, கைதடிப் பழனி போன்ற தவில் கலைஞர்களும் தற்கால இளம் தலைமுறையினராக P. பாலமுருகன், P. குமரன், S. நாகதீபன் போன்ற நாதஸ்வரக் கலைஞர்களையும் T.உதயசங்கரி, S.சுதாகரன், S.செந்தில்நாதன் போன்றோரும் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள்.*

**கலைஞனின் தனித்துவமும் அடையாளமும்**

*பொதுவாகப் பாணி (style) என்பது தனித்துவமான பண்பு உருவம் அல்லது வகை என அர்த்தம் கொள்ளப்படும். இசையைப்*

பொறுத்தமட்டில் இது "ஒன்று செய்யப்பட்ட அல்லது படைக்கப்பட்ட அல்லது அளிக்கை செய்யப்பட்ட குறிப்பிட்ட முறை அல்லது உத்தி" என்பதாகக் கொள்ளப்படும்.( *'Style' (in Marriam Webster. Available at: https://www.merriam-webster.com/ & (Accessed: April 2022)*

சங்கீதத்தில் பாணி என்பது பல்வேறு வழிகளில் பயன்படுத்துப்படுகிறது. இதை றோஜர் டனன்பேர்க் பின்வருமாறு இனங்காண்கிறார்.( *Dannenberg, R.B. (2010) 'Style in Music', in The Structure of Style: Algorithmic Approaches to Understand Manner and Meaning, Shlomo Argamon, Kevin Burns, and Shlomo Dubnov (Eds), berlin Springer-Velag, pp. 45-58.)*

1) இசையின் வரலாற்று காலகட்டம் சம்பந்தப்பட்டு
2) இசையமைப்பாளர்கள் சம்பந்தப்பட்டு
3) ஆற்றுகை செய்பவர்கள் குறிப்பாகப் புத்தாக்கம் செய்பவர்கள் சம்பந்தப்பட்டு
4) இசையின் இழைமம் *texture)* சம்பந்துப்பட்டு
5) உணர்ச்சி வெளிப்பாடு சம்பந்தப்பட்டு: கோட்போரிடத்தில் ஏற்படு பாவம் பற்றியது
6) வகை அல்லது செல்லணி *(genre_)* சார்ந்து

கலைஞனின் தனித்துமான அடையாளம் அல்லது பாணியைப் பின்வருமாறு புரிந்து கொள்ளலாம். கலைஞனின் படைப்பாக்கத் தனித்துவம் என்பது அவனின் இறந்த மற்றும் நிகழ்காலத்தினையும், வாழ்க்கை அனுபவங்களையும், படைப்பினுள் கையாள்வதற்குரிய ஆற்றலையும் குறிக்கிறது. பாரம்பரிய இசைக்கலைஞர்கள் பொதுவான மரபைப் பின்பற்றினாலும் தேர்ச்சியுள்ள கலைஞன் தன்னுடைய முறையில் பாரம்பரியத்தைக் கையாளத்தக்கவனாகவும், வியாக்கியானம் செய்யத்தக்கவனாகவும் காணப்படுகிறான். இதனூடாகவே தனிநபர்களை அடையாளம் காணக்கூடிய பாணி அமைப்பு உருவாகிறது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும் (*Laurie Riley*).இதனடிப்படையில் யாழ்ப்பாணத்து தவில் மற்றும் நாதஸ்வரக் கலைஞர்களின் மல்லாரி வாசிப்பிலுள்ள தனித்துவங்கள் நோக்கப்படலாம்.

**மல்லாரிகளின் தனித்துவம்**

இங்கு தனித்துவம் என்பது இரண்டு வகையாகப் பார்க்கப்படுகின்றது.

*1. மல்லாரி உருவாக்கலுக்கான தனித்துவம்*

*2. வாசிப்பு முறையிலான தனித்துவம்*

***1) மல்லாரி உருவாக்கலுக்கான தனித்துவம்.***

*ஆரம்ப காலங்களில் ஒரு சில கலைஞர்களினால் தனித்துவமாக உருவாக்கப்பட்டு வந்துள்ளது. இங்கு தனித்துவத்தின் பண்பு என்பது மல்லாரி உருவாக்கத்திற்கு முழுமையான உருவத்தினைப் பெற்றுக் கொள்வதாகும். இத் தனித்துவத்தினை எவ்வாறு வகைப்படுத்தலாம் எனும் பொழுது கீழ்வரும் முக்கியமான சில விடயங்களை கோடிட்டுக் காட்டுதல் பொருத்தமானதாகும்.*

*1. துறை சார்ந்த நிபுணத்துவம் பெற்றிருத்தல்*

*2. இன்னொன்றில் சாயல் புலப்படாதிருத்தல்*

*3.சுயமுயற்சி அல்லது திறன் வெளிப்படுத்தல்*

*ஆனால் பிற்காலங்களில் அதன் அமைப்பு முறைகளில் தனிநபரின் தனித்துவம் என்பது மாறி கூட்டு முயற்சினாலேயே அதிகளவு மல்லாரிகள் உருப்பெற்றுள்ளன. மூன்று வகையில் இக்கூட்டு முயற்சியானது அமைகின்றன. முதலாவது கூட்டு முயற்சியில் ஒருவர் ஒரு பகுதியை அமைக்க அதற்கு இன்னொருவர் தன்னுடைய கற்பனை வளத்தினால் அதை அழகுபடுத்துவர். இரண்டாவது கூட்டு முயற்சியில் தவில் கலைஞர்கள் ஒரு மல்லாரியை ஜதி அமைப்பில் (தவில் சொற்கட்டில்) அமைக்க அதற்கு நாதஸ்வரக் கலைஞர்கள் நாதஸ்வரத்தில் வாசிக்கக் கூடியவாறு அந்த ஜதிக்கு ஸ்வர அமைப்பினை உருவாக்குவார்கள். மூன்றாவது கூட்டு முயற்சியில் தவில் சொற்பதங்களில் ஏதாவது ஒரு அடியை எடுத்து அதை மல்லாரியின் அமைப்பிற்குரிய சட்டதிட்டங்களோடு நடையாகக் கொண்ட மல்லாரியாக ஒரு புதிய மல்லாரியினை நாதஸ்வரக் கலைஞரின் உதவியோடு உருவாக்குவர். இப்படியாகப் பல கலைஞர்களின் கூட்டு முயற்சியினால் இம் மல்லாரிகள் உருவாக்கப்படுகின்ற காரணங்களினால் தற்போது மல்லாரிகள் ஒருவரின் தனித்துவத்தின் கீழ் அமைக்கப்படுவது மிக மிகக் குறைவென்றே பழம்பெரும் கலைஞர்களினால் குறிப்பிடப்படுகின்றது. (கேதீஸ்வரன், சு. (2022) நேர்காணல்- அளவெட்டி. 06.04.; பஞ்சமூர்த்தி, ஏ.மு. (2022) நேர்காணல்- கோண்டாவில். 02.04.). அதனை தற்போது நேரடியாகப் பார்க்கவும் முடிகின்றது.*

*2) வாசிப்பு முறையிலான தனித்துவம்*

*யாழ்ப்பாணத்தில் மல்லாரி வாசிப்பு முறையில் தனிநபர் வாசிப்பு முறையானது மிகமிக அருகியதாகவே காணப்படுகின்றது. இங்கு தனிநபர் வாசிப்பு என்பது இரண்டு பேரில்(ஒரு நாதஸ்வரம், ஒரு தவில்) தங்கியுள்ளது இவர்களை நித்தியப்படி மேளம் (கோயில்மேளம்) என்பார்கள். ஆரம்ப காலங்களில் நித்திய பூ'ஜைகளுக்கு கோயில்கள் தனிநபர் வாசிப்பிலமைந்த கோயில் மேளங்களிலேயே தங்கியிருந்தன. இன்றும் சில பின்தங்கிய கிராமங்களில் வசதி குறைந்த ஆலயங்களில் இவ்வாறான தனிநபர் வாசிப்பு முறையானது நடைமுறையில் இருந்து வருகிறது. எனினும் பொருளாதார பலம் பொருந்திய கோயில்களில் நித்திய பூஜைகளின் போது ஆறு கலைஞர்களைக் கொண்ட குழுவே கோயில் மேளமாக இன்று மாறியுள்ளது. இதை ஒரு செற் (குழு) என்பார்கள். இப்படிப் பல செற் சேர்ந்து சேவகம் செய்வதே இன்று யாழ்ப்பாணத்திலுள்ள வழமையாகும். இது ஒரு புதிய மரபாக உருவாகியுள்ளது.*

*யாழ்ப்பாணத்தில் மல்லாரி வாசிப்பில் இக்குழுச் செயற்பாடானது மேலோங்கியிருந்ததற்கு இரண்டு முக்கிய காரணங்களைக் கூறமுடியும்.*

*1. ஆலயங்களும், அதன் நிர்வாகமும் உற்சவ காலங்களைப் போட்டி மனப்பாங்கில் செய்வது*

*2. நாதஸ்வர, தவில் கலையும் அதனை வாசிக்கும் கலைஞர்களும் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றமை*

*இதன் காரணமாக இக் கலைஞர்களை ஒவ்வொரு திருவிழா உபயகாரர்களும் அதிகமாக பணம் கொடுத்து அழைக்கின்றார்கள்;. ஒரு ஆலயத்தில் திருவிழாவின் போது மூன்று அல்லது நான்கு செற் கலைஞர்களை அழைப்பதன் மூலம் மொத்தமாக எட்டு அல்லது பத்து நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வாசிப்பார்கள். எனவே யாழ்ப்பாணத்து இசை மரபிலே மல்லாரி வாசிப்பு முறையின் தனித்துவத்தை ஓரிருவரை வைத்து மதிப்பிட முடியாது ஏனெனில் இங்கு பல கலைஞர்கள் ஒருமித்து ஆக்ரோசமான வாசிப்பினை வெளிப்படுத்துவார்கள். யாழ்ப்பாணத்து மல்லாரி இசைக்குப் பெருமையே இக்குழுச் செயற்பாடுதான்.*

*கோயில் மேளம், இவர்கள் ஆலயத்தில் நிரந்தரமான எல்லா நிகழ்வுகளுக்கும் வாசிப்பவர்கள். இவர்கள் தான் மல்லாரியை முதலில் ஆரம்பிப்பார்கள் அதன் பின்னரே சிறப்பு வித்துவான்கள் (ஏறுபடி*

மேளம்) வாசிக்க வேண்டும். வசந்த மண்டபத்திலிருந்து உள்வீதி முழுவதும் மல்லாரியை வாசிப்பதில் கோயில் மேளத்தினது பங்கே மேலோங்கிக் காணப்படும். இவர்களோடு இவர்களை அனுசரித்து பின்னாலே தான் ஏறுபடி மேளம் எனப்படும் சிறப்புக் கலைஞர்கள் வாசித்தாக வேண்டும். ஆனால் வெளி வீதி உலாவில் ஏறுபடி மேளத்தின் பங்களிப்பே மேலோங்கிக் காணப்படும். இந்த நடைமுறை இன்றும் பேணபபட்டு வருகின்றது. இது யாழ்ப்பாணத்தின் மல்லாரி இசை மரபின் தனித்துவமான அம்சமாக கணிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மல்லாரி வாசிப்பில் அவ்வப்போது பல புதுமைகள் புகுத்தப்பட்டு வந்துள்ளது. உதாரணமாக சாதாரண அமைப்பில் இருக்கும் மல்லாரிகளைப் புதுமையாக திரிகாலப்படுத்துதல். நடைமாற்றுதல், கார்வைகளில் மாறுதல்களை ஏற்படுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப் புதுமைகளின் கலைஞர்கள்ூன் தனிப்பட்ட பல வேறுபாடுகளை அவதானிக்க முடிகிறது. நாதஸ்வரத்தில் தங்களுக்கென ஒரு வரண்முறையை வைத்திருப்பவர்கள் ஒரு சிலரே அவர்களுள் அளவையூர் N.K. பத்மநாதன், இணுவையூர் மு.சு. சுந்தரமூர்த்தி இவர்கள் இருவரின் வாசிப்பும் வேறுவிதம். இவர்களது வாசிப்பில் கனம், ப்ருக்கா, பாவம் (அசைவு) மற்றும் நுட்பமான சில பிரயோகங்கள் இவர்களுக்கான தனி முத்திரையாகும். மல்லாரிகளை வாசிக்கும் போது கார்வைகளை அதிகமாகக் கையாள்கின்றார்கள். (கார்வை என்பது ஒரு ஸ்வரத்திற்கும் இன்னோர் ஸ்வரத்திற்கும் இடையேயான கால அளவு) மல்லாரிகளின் கடினத்தன்மைக்குக் காரணம் இக்கார்வைகளேயாகும். அதாவது மல்லாரியின் ஒரு சீரான போக்கை இக்கார்வைகளைக் கொண்டு மாற்றுவது அடுத்து மல்லாரியை ஒரு நடையில் வாசித்துக் கொண்டிருக்கும்போது திடீரென இன்னொரு நடையினை அதனுட் புகுத்தி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புதல் இது மிகவும் கடினமானதொரு வாசிப்பாகும். இந்தச் செயலைச் செய்வதற்கு தவில் வாசிப்பவரும், தாளம் போடுகின்றவரும் உறுதுணையாக இருந்தால் மட்டுமே இது சாத்தியமானதாகும்.

**முடிவுரை**

கோயில் சார்ந்த கிரிகைகளுடன் சம்பந்தப்பட்ட மல்லாரி என்கின்ற இசை வடிவமானது அதன் தற்காலத்து வாசிப்பு முறையில் தனிநபர் மற்றும் குழு என்கின்ற இருவகையான அடையாளங்களை உள்ளடக்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் மல்லாரி இசையில் தனித்துவம் என்பது மல்லாரிகளின் உருவாக்கத்திலும் வாசிப்பு முறையிலும் தனி

*நபர்களில் தங்கியிருப்பது மிகமிகக் குறைவென்றே குறிப்பிட முடிகின்றது. மாறாக மல்லாரி உருவாக்கலிலும் வாசிப்பு முறைகளிலும் குழுச் செயற்பாடுகளுக்கே அதிகளவான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதைவிட இங்கு தனித்துவம் என்பது தனிப்பட்ட ஒருவரையோ ஒரு பிரதேசத்தையோ ஒரு சில ஊர்களுடன் தொடர்புபட்டதோ அல்ல. இது ஒரு சமூகத்துடன் தொடர்புபட்டதாகும். அத்துடன் எந்த ஒரு ஆலயத்தில் உற்சவங்கள் நடைபெற்றாலும் அங்கு எல்லா ஊர்களிலும் இருக்கின்ற கலைஞர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து குழுவாக வாசிப்பதுதான் இம் மண்ணின் பண்பாடாகும். இதுவே யாழ்ப்பாணத்து மல்லாரி வாசிப்பின் தனித்துவமுமாகும். மேலும் திரிகாலப்படுத்துதல். நடைமாற்றுதல், கார்வைகளில் மாறுதல்களை ஏற்படுத்துதல் போன்றவற்றினூடாக யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான நாதஸ்வர வித்துவான்களில் சிலர் மல்லாரி வாசிப்பில் தமது தனியடையாளங்களைச் செதுக்கியுள்ளனர்.*

**உசாத்துணை**


Dannenberg, R. B. (2010) ‘Style in music’, in Argamon, S., Burns, K. and Dubnov, S. (eds.) *The structure of style: algorithmic approaches to understand manner and meaning.* Germany: Springer, pp. 44 – 58.

Krishnan, L. (2016) ‘Sithukadu Murugavel deconstructs the Mallari’, *The Hindu*, 21 July. Available at: https://www.thehindu.com/features/friday-review/music/Sithukadu-Murugavel-deconstructs-the-Mallari/article14500978.ece/amp/ (Accessed: 25 July 2022).

‘Personal Style.’ Available at: https://laurierileymusic.com/2013/04/05/styles-regional-national-and-personal/ (Accessed: 25 June 2022).

‘Style’ (2007) in *Marriam Webster*. Available at: https://www.merriam-webster.com/ (Accessed: 28 April 2022).

Sundaram, B. M. (2018) *Nadamum Nathanum - overview of Nagaswaram tradition*. 1 Feb. Available at: https://www.youtube.com/watch?v=aa99H0gXuVY (Accessed in April 2022).

*கேதீஸ்வரன், சு. (2022) நேர்காணல் - அளவெட்டி. 06 ஏப்ரல் 2022.*

*கோலப்பன், ப. (2013) ‘மல்லாரிகளின் கம்பீரம்’, இந்து தமிழ் இசை, 5 அக்டோபர் 2013.* Available at: https://www.hindutamil.in/news/art/217837-.html (Accessed: 18 August 2022).

*கோபிதாஸ். சு. (2011) ஈழத்து மங்கல வாத்திய இசைமரபு. இசைக்கலைமாணி இறுதியாண்டுத் தேர்வு ஆய்வுக் கட்டுரை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*சுந்தரம், டீ. ஆ. (2001) மங்கல இசை மன்னர்கள். சென்னை: மெய்யப்பன் தமிழாய்வக வெளியீடு.*

*பஞ்சமூர்த்தி, ஏ.மு. (2022) நேர்காணல்- கோண்டாவில். 02 April 2022.*

*பாலகிருஷ்ணன், ஆ.டீ. (2022) நேர்காணல்- நெல்லியடி. 22 March 2022.*

*‘மறைந்துவரும் மங்கல இசை’* (2015) *BBC News தமிழ்.* Available at: https://www.bbc.com/tamil/arts_and_culture/2015/11/151101_nagaswaramseriespart7 (Accessed: 18 August 2022).